**ஜூலை – 04**

# TNPSC துளிகள்

- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான அடல் ஓய்வூதிய திட்ட வருடாந்திர விருதினைப் பாங்க் ஆஃப் இந்தியா வங்கி பெற்றுள்ளது.
- டாக்டர் உஷா தாக்கூர் இந்தி இலக்கிய மேம்பாட்டில் ஆற்றியப் பங்களிப்பிற்காக என்று 12வது விஸ்வ இந்தி சம்மான் விருதினைப் பெற்றுள்ளார்.
- அமெரிக்கா ஜப்பான் மற்றும் தென் கொரியாவுடன் இணைந்து கிழக்கு சீனக் கடலில் ஃபிரீடம் எட்ஜ் எனப்படும் தனது முதல் முத்தரப்பு பல் துறை பயிற்சியை நடத்தியது.
- போர்னியா யானை அல்லது எலிபாஸ் மாக்சிமஸ் போர்னென்சிஸ் இனமானது, IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் கீழ் 'அருகி வரும்' இனமாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது.
- உலகளாவியச் சுற்றுச்சூழல் மைய (GEF) சபையின் 67வது கூட்டம் ஆனது வாஷிங்டன் DC நகரில் நடைபெற்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு விண்வெளி சார் தொழில் துறை கொள்கை, 2024 - வரைவு அறிக்கை




- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு விண்வெளித் தொழில்துறைக் கொள்கையின் வரைவை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- இது 10 ஆண்டுகளில் சுமார் 10,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் துறையில் உள்ள நபர்களுக்கு ஏராளமான சலுகைகளையும் வழங்க உள்ளதாக

இது உறுதியளித்தது.

- விண்வெளித் துறை தொடர்பான உற்பத்தி மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.
- மாநில அரசானது, திருச்சியில் TREAT எனப்படும் பொது மையத்தினை நிறுவுவதற்காக ஏற்கனவே தனியார் தொழில் நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- இது விண்வெளித் துறையின் கனரகப் பொறியியல் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் திறன்களைக் கொண்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை, 2024 - வரைவு அறிக்கை





- 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கைக்கு (NEP) எதிராக தமிழகத்தில் மாநிலக் கல்விக் கொள்கையின் வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.
- நீதிபதி முருகேசன் தலைமையிலான குழு இந்த வரைவு அறிக்கையினை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.
- தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றினை பயிற்று மொழியாக கொண்ட இரு மொழிக் கொள்கையை தொடர்வதோடு, 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை ரத்து செய்வதற்கும், தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- அனைத்து உயர்கல்விப் படிப்புகளுக்குமானச் சேர்க்கைக்கு எந்தவிதமான நுழைவுத் தேர்வையும் நடத்துவதற்கு எதிராக அக்குழு பரிந்துரைத்துள்ளது.
- அனைத்து உயர்கல்விப் படிப்புகளுக்குமான சேர்க்கைக்கு பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு வாரியத் தேர்வுகள் இரண்டிலும் இருந்து பெறப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண்கள் தான் அடிப்படையாக இருக்க வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளை அரசுப் பள்ளிகளுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும்.
- தமிழ்நாட்டில் பல்வேறு தனிநபர்கள் / பெரு நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிகள் / கல்லூரிகளுக்கு இணையாக இயங்கும் பயிற்சி மையங்களை அமைப்பு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் "தடை" செய்ய அக்குழுவானது பரிந்துரைத்துள்ளது.
- பயிற்சி மையங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க உரிய அதிகாரங்களைக் கொண்ட ஒழுங்குமுறை ஆணையத்தினை உருவாக்கி அரசு செயல்படுத்த வேண்டும்.
- அனைத்துத் தனியார் உயர்கல்வி நிறுவனங்களையும் வேறுபாடின்றி ஒரே சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டிய அவசியம் உள்ளது.

- தனியார் நிர்வாகத்தினால் நடத்தப்படும் கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்கான கட்டண வசூலை முறைப்படுத்த 1976 ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் அக்குழு கோரியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் 3 புதிய குற்றவியல் சட்டங்கள்





- ஜூலை 01 ஆம் தேதி முதல் மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்ததையடுத்து, இந்தியா தனது குற்றவியல் நீதி முறையை முற்றிலுமாக மாற்றி அமைத்துள்ளது.
- இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு (IPC) மாற்றாக பாரதீய நியாய சன்ஹிதா (BNS) கொண்டு வரப்பட்டுள்ளது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு (CrPC) மாற்றாக பாரதீய நாக்ரிக் சுரக்சா சன்ஹிதா (BNSS) கொண்டு வரப்பட்டுள்ளது.
- இந்தியச் சாட்சியச் சட்டத்திற்கு மாற்றாக பாரதீய சாக்சய ஆதினியம் (BSA) கொண்டு வரப்பட்டுள்ளது.
- மூன்று சட்டங்களும் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டன.
- இந்த மூன்று புதிய சட்டங்கள் ஆனது, தண்டனை வழங்குவதை விட நீதி வழங்குவதன்

மீது கவனம் செலுத்துகின்றன மற்றும் விரைவான நீதியை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

- இது "அனைவருக்கும் நீதி கிடைக்கப் பெறுதல்" என்பதை வலியுறுத்தும் வகையில் நீதித்துறை மற்றும் நீதிமன்ற நிர்வாக அமைப்பை வலுப்படுத்துகிறது.
- இந்தப் புதிய சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படும் முதல் வழக்கு மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள நிஷாத்புரா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## INSTC - முதல் ஏற்றுமதி





- சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித்தடத்தின் (INSTC) வழியாக நிலக்கரி ஏற்றப் பட்ட முதல் இரண்டு இரயில்களை இந்தியாவிற்கு அனுப்பியுள்ளதாக ரஷ்யாவின் தேசிய இரயில்வே நிறுவனம் அறிவித்துள்ளது.
- முதல் முறையாக, குஸ்பாஸ் நிலக்கரி ஏற்றப்பட்ட முதல் இரண்டு இரயில்கள் சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித் தடத்தில் இந்தியாவை நோக்கிப் பயணிக்கின்றன.
- கெமரோவோ பகுதியில் இருந்து இந்த இரயில்கள் புறப்பட்டுள்ளன.
- அவை கஜகஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் வழியாக INSTC வழித்தடத்தின் கிழக்குக் கிளை வழியாக ஈரானியத் துறைமுகமான பந்தர் அப்பாஸ் வரையில் பயணித்தன.
- INSTC என்பது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்ற ஒரு பகுதியினை இந்தியாவின் மும்பை துறைமுகத்துடன் இணைக்கும் 7,200 கிலோமீட்டர்கள் (4,500 மைல்கள்) நீளம் கொண்ட பல் முனை வழித்தடம் ஆகும்.
- இது இரயில்வே, சாலை வலையமைப்பு மற்றும் துறைமுகங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியது.

- ஆரம்பத்தில் NSTC திட்டம் என்று அழைக்கப்பட்ட இந்த INSTC ஒப்பந்தமானது 2002 ஆம் ஆண்டில் ரஷ்யா, ஈரான் மற்றும் இந்தியாவினால் கையெழுத்திடப்பட்டதையடுத்து, அவை அதன் ஸ்தாபன உறுப்பினர்களாக உள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கான நிதி வழங்கீடு

- மாநில அரசுகள்/ ஒன்றியப் பிரதேசங்களுக்கான (UTs) மொத்த வழிவகைக்கான முன்பண (WMA) வரம்பு 60,118 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- தற்போதைய வரம்பு 47,010 கோடி ரூபாயாகும்.
- திருத்தப்பட்ட WMA வரம்பு ஜூலை 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.
- WMA என்பது மாநிலங்களுக்கு அவற்றின் வருவாய் மற்றும் கொடுப்பனவுகளின் பணப் புழக்கத்தில் உள்ள தற்காலிகப் பொருத்தமின்மையைக் குறைக்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஓவிய அழகி வண்ணத்துப்பூச்சி

- முதன்முறையாக, அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக வண்ணத்துப் பூச்சிகள் பறப்பதை அறிவியலாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர்.
- அட்லாண்டிக் கடல்கடந்த வலசை நிகழ்வானது, மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து தென் அமெரிக்காவில் உள்ள பிரெஞ்சு கயானா வரை 2,600 மைல்களுக்கு மேல் மேற் கொள்ளப் படுகிறது.
- அட்லாண்டிக் பெருங்கடல் வழியான, இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக நீண்ட பூச்சி

இடம்பெயர்வுகளில் ஒன்றை நிறைவு செய்ததன் மூலம் இந்த வண்ணத்துப்பூச்சி இனம் அந்தப் பகுதியினைச் சென்றடைந்தது.

- ஓவிய அழகி வண்ணத்துப்பூச்சி இனத்தின் இடம்பெயர்வு ஆனது நீண்ட தூரம் மட்டும் அல்லாமல், சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு மிகவும் ஏற்ற வகையிலானது.




## ஒற்றை மெயின்லேண்ட் செரோவ்



**Lone ranger:** A mainland serow at the Raimona National Park in western Assam. SPECIAL ARRANGEMENT


- தனது இயற்கையான தாயகமான பூட்டானுக்குப் பதிலாக வேறொரு இடத்தில் மிகக் குறைவான உயரத்தில் செரோவ் (இமயமலை வரையாடு) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது ஆடு மற்றும் மான்களுக்கு இடைப்பட்ட தோற்றம் கொண்ட பாலூட்டியாகும்.
- 200-3,000 மீட்டர் உயரத்தில் உள்ள நிலப்பகுதிகளில் செரோவ் வாழ்கிறது.
- இமயமலை பகுதியில் உள்ள இந்தியா-பூடான் எல்லையில் அமைந்துள்ள பிப்சூ வன

விலங்குச் சரணாலயம் மற்றும் ராயல் மனாஸ் தேசியப் பூங்கா ஆகியவற்றில் இந்த விலங்குகளின் வாழ்விடம் உள்ளது.

- இந்த விலங்குகளில் மேலும் மூன்று இனங்கள் உள்ளன:
  - ஜப்பானிய செரோவ்,
  - சிவப்பு செரோவ் (கிழக்கு இந்தியா, வங்காளதேசம் மற்றும் மியான்மரில் காணப் படுகிறது), மற்றும்
  - தைவான் அல்லது ஃபார்மோசன் செரோவ்.

# முக்கிய தினங்கள்

## தேசிய மருத்துவர் தினம் - ஜூலை 01




- சமூகத்திற்கு மருத்துவர்கள் ஆற்றும் விலைமதிப்பற்றப் பங்களிப்பினை வெகுவாக அங்கீகரிப்பதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இது புகழ்பெற்ற மருத்துவர் பிதான் சந்திர ராய் அவர்களின் பிறந்த நாள் மற்றும் இறப்பு நாளினை அனுசரிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டாக்டர் ராய் மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதலமைச்சராகவும் முக்கியப் பணியாற்றினார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Healing Hands, Caring Hearts" என்பது ஆகும்.

## தேசியப் பட்டயக் கணக்காளர் தினம் - ஜூலை 01

- இந்த நாள் 1949 ஆம் ஆண்டில் இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI)

நிறுவப் பட்டதைக் கொண்டாடுகிறது.

❖ பொருளாதார மற்றும் நிதிச் சூழலை வடிவமைப்பதில் பட்டயக் கணக்காளர்கள் வகிக்கும் முக்கியப் பங்கை இது அங்கீகரிக்கிறது.

❖ இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) ஆனது 1949 ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது.

❖ பட்டயக் கணக்காளர்களுக்கான உலகின் இரண்டாவது பெரிய தொழில்முறை அமைப்பு என்ற பெருமையை ICAI பெற்றுள்ளது.




## சரக்கு மற்றும் சேவை வரி தினம் 2024 - ஜூலை 01




❖ முதன் முதலில் 2018 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது என்ற வகையில் இந்தத் தினம் சரக்கு மற்றும் சேவை வரி முறை ஏற்றுக் கொள்ளப் பட்ட முதல் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

❖ பாராளுமன்றம் ஆனது சரக்கு மற்றும் சேவை வரியினை விதித்து வசூலிக்க மத்திய

அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், அரசியலமைப்பு (101வது திருத்தம்) சட்டத்தினை இயற்றியது.

- சரக்கு மற்றும் சேவை வரி என்பது, மத்திய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்படும் பல சிக்கலான வரிகளை நீக்கியதன் மூலம் இந்தியாவின் வரி கட்டமைப்பினை மாற்றியமைத்த ஒரு விரிவான மறைமுக வரியாகும்.
- சரக்கு மற்றும் சேவை வரியானது, விதிப்பு இலக்குகளை மையமாகக் கொண்டு, வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தச் செய்வதன் மூலம் வரி கட்டமைப்பை எளிதாக்கியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★